## கடிகாரம்

- ஒரு மணி நேரத்திற்கு இரண்டு முள்ளும் ஒரு தடவை மட்டுமே சந்தித்துக் கொள்ளும்.
- இரண்டு முள்ளிற்கும் இடையே செங்கோண முக்கோணம் அமைய வேண்டுமெனில் 15 நிமிடத்திற்கான இடைவெளி இருக்க வேண்டும்.
- இரண்டு முள்ளும் எதிர்திசையில் இருக்க வேண்டுமெனில் இரண்டு முள்ளிற்கும் இடையில் 30 நிமிடம் இருக்க வேண்டும்.
- சுற்றுகின்றது.°மணி முள்ளானது 12 மணி நேரத்திற்கு 360
- சுற்றுகிறது.°நிமிட முள்ளானது 60 நிமிடங்களுக்கு 360
- சரியான நேரம் 8 மணியாக இருக்கும்போது கடிகாரமானது 8.20 காட்டினால் 20 நிமிடம் விரைவாகும்.

1. ஒரு கடிகாரம் மணி 3.25 காட்டும் பொழுது மணி முள்ளிர்க்கும் நிமிட முள்ளிர்க்கும் இடைப்பட்ட கோணம் எவ்வளவு?

A) 47.5 B) 50 C) 120 D) 60

2. 2 மணி முதல் 3 மணிக்குள் நிமிட முள்ளும் மணி முள்ளும் சந்தித்துக் கொள்ளும் நேரம் என்ன?

A) 2.10 B) 2.20 C) 2.10 D) 2.30

3. 4 மணிக்கும் 5 மணிக்கும் இடையே எந்த நேரத்தில் மணி முள்ளுக்கும் நிமிட முள்ளுக்கும் இடையே செங்கோணம் அமையும்.

A) 4.30 B) 4.5 C) 4.5 D) 4.10

4. 8 மணிக்கும் 9 மணிக்கும் இடையில் எந்த நேரத்தில் இரண்டு முள்ளும் நேர்கோட்டில் இருக்கும். (சேர்ந்து இல்லாமல்)

A) 8.09 B) 8.12 C) 8.11 D) 8.15

5. 5 மணிக்கும் 6 மணிக்கும் இடையில் எந்த நேரத்தில் நிமிட முள்ளிற்கும் மணி முள்ளிற்கும் 3 நிமிட இடைவெளி இருக்கும்.

A) 5.24 B) 5.25 C) 5.30 D) 5.35

6. ஒரு கடிகாரம் பகலில் ஆரம்பிக்கிறது. அப்படியானால் 5.10 நிமிடத்துக்கு அதனுடைய மணி முள்ளின் கோணம் என்ன?

A) 145° B) 150° C) 155° D) 160° E) 95°

7. ஒரு சரியான கடிகாரம் 8 மணியை காட்டுகிறது. மதியம் 2 மணிக்கு மணிமுள் எத்தனை கோணம் சுழன்றிருக்கும்?

A) 144° B) 150° C) 168° D) 180°

8. 3.40க்கு மணிமுள் மற்றும் நிமிடமுள் எந்த கோணத்தில் இருக்கும்?

A) 120° B) 125° C) 130° D) 135°

9. 8.30க்கு மணிக்கு மணிமுள் மற்றும் நிமிடமுள் எந்த கோணத்தில் இருக்கும்?

A) 80° B) 75° C) 60° D) 95°

10. 4.20க்கு மணி முள்ளுக்கும் நிமிட முள்ளுக்கும் இடையே உள்ள கோணம் என்ன?

A) 0° B) 10° C) 5° D) 20°

11. 5.15 மணிக்கு கடிகாரத்தின் முட்கள் எந்த கோணத்தில் இருக்கும்?

A) 58 ½ ° B) 64° C) 67 ½ ° D) 72 ½°

12. 10.25க்கு கடிகாரத்தின் முட்கள் இடையே உள்ள பிரதி கோணம் என்ன?

A) 180° B) 192 ½ ° C) 195° D) 197 ½ °

13. ஒரு நாளைக்கு எத்தனை நேரம் கடிகாரத்தின் முட்கள் சந்திக்கும்?

A) 20 B) 21 C) 22 D) 24

14. ஒரு நாளைக்கு எத்தனை நேரம் கடிகாரத்தின் முட்கள் நேர்கோட்டில் இருக்கும்?

A) 22 B) 24 C) 44 D) 48

15. ஒரு நாளைக்கு எத்தனை நேரம் கடிகாரத்தின் முட்கள் செங்கோணத்தில் இருக்கும்?

A) 22 B) 24 C) 44 D) 48

விடைகள் :

1.a 2. c 3. b 4. c 5. c

6. e 7. d 8. c 9.b 10. b

11. c 12. d 13.d 14. c 15. c

**WhatsApp Group -ல் சேர – [கிளிக் செய்யவும்]**

**Telegram Channel [கிளிக் செய்யவும்]**